**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், மாசி மாதம் 5 ம் நாள்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>நிறைவேற்று மனு எண். 7/2025</u>**

**<u>அசல் வழக்கு எண்.22/2022</u>**

M. ராஜேந்திரன், த/பெ. லேட் முருகநாத கவுண்டர்,

வசிப்பிடம் எண்.18, தனலெட்சுமி மில் ரோடு,

சோமனூர், கருமத்தம்பட்டி - 641 668.

**... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்கள்**

/எதிர் /

1. சம்பாத்தாள், க/பெ. கருப்புசாமி, வசிப்பிடம்
எண்.144/80, பழைய எண்.68, தெற்கு வீதி,
எழச்சிபாளையம், கருமத்தம்பட்டி கிராமம்,
சூலூர் தாலுக்கா.

2. R. காளியம்மாள், க/பெ. ரத்தினசாமி, வசிப்பிடம்
எண்.309, 5 வது வீதி, கொங்குமா நகர், அன்னூர்
ரோடு, கருமத்தம்பட்டி, சோமனூர் - 641 659.

**... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 வீதி 35ன் கீழ் மனுசொத்தின் காலியான உடைமையை மனுதாரருக்கு வழங்குமாறு

எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட கோரியும், எதிர்மனுதாரர்கள் அவ்வாறு செய்யத் தவறினால், நீதிமன்றம் மூலம் நீதிமன்ற கட்டளை நிறைவேற்றுனரை நியமித்து, மனு சொத்தின் காலியான உடைமையை வழங்க உத்தரவிட கோரியும் மனுதாரரால் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 17.07.2025

மனுவின் மீது வில்லை : ரூ.20/-

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. அந்தோணி அரவிந்த், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவாணையுரை

1). நிறைவேற்று மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2). மனுசொத்தின் காலியான உடைமையை மனுதாரருக்கு வழங்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

3). எதிர்மனுதாரர்கள் அவ்வாறு செய்யத் தவறினால், நீதிமன்றம் மூலம் நீதிமன்ற கட்டளை நிறைவேற்றுனரை நியமித்து, மனு சொத்தின் காலியான உடைமையை மனுதாரரிடம் வழங்க இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது

4). செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**<u>செலவு தொகை பட்டியல்</u>**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>சொத்து விவரம்</u>**

//இல்லை//

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

Final Order
E.P.No.7/2025 in
OS.No.22/2022
Dated : 17.02.2026
DMC, Sulur.